10.10.2025 O.S 224/2019 பி.வா.சா1 சண்முகராஜ் என்ற ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வழக்கறிஞர் குமாஸ்தவாக 30 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். நான் குமாஸ்தாவாக பதிவு செய்துள்ளேன். நான் பல வழக்கறிஞர்களுக்கு வழக்கு கொடுப்பேன் என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் சிவபத்மநாபன் என்பவரிடம் வழக்கறிஞர் குமாஸ்தாவாக பதிவு பெற்றுள்ளேன். இந்த வழக்கானது திருநெல்வேலி விடுமுறை கால நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 116/19 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது நான் மட்டும் தான் பிரதிவாதி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 6 செண்ட் இடத்தை சந்திரா என்பவருக்கு விற்பனை செய்துவிட்டதாக கூறியதால் மனு தாக்கல் செய்யப்பட்டு அவர் 2 ம்பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் சந்திராவிற்கு 6 செண்டு அதில் நான் கட்டிய கட்டிடத்தை கிரையம் கொடுத்துள்ளேன். எனக்கு புல எண்.149/1 ல் 60 செண்ட் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 77 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளேன். அதற்கு நீதிமன்ற தீர்ப்பும் உள்ளது. இது சம்பந்தமாக கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.541/2009 ல் வழங்கப்பட்டுள்ளது. என் கிரையப்பத்திர 19.2.2013 தேதியாகும். அந்த ஆவணம் வா.சா.ஆ 14 கிரைய ஆவணத்தில் எனக்கு 60 செண்டு மட்டுமே கிரையம் பெற்றுக்கொண்டதாக பதிவுகள் உள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் முழு சொத்தான 77 செண்டையும் கிரையம் பெற்றேன். அதை ஒப்புக்கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ 14 ஆவணத்தில் பக்கம் 7 ல்6 60 செண்டில் நிற்கும் 50 தென்னை மரங்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் மீண்டும் தவறாக சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 14 ல் எந்த சொத்தை கிரையம் பெறுவதாக வரைபடமும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த வரைபடத்தில் அளவுகள் 60 செண்டுகள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுவும் தவறாகும். வா.சா.ஆ 14 ன்படி எனக்கு 60 செண்டை தவிர்த்து எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 14 ல் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ள சொத்தில் கட்டிடங்கள் எதுவும் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையத்திற்கு பின்பு கட்டிடம் கட்டினேன். நான் கட்டிடம் கட்டினேன் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்புடைய மற்றொரு வழக்கு அசல் வழக்கு எண்.88/2020 முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.88/2020 என்பது நிரந்தர உறுத்துகட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் என்பவரின் வாதிகளும், இந்த வழக்கின் வாதிகளும் சேர்ந்து வாதிகளாக இருந்து என் மீதும், சந்திரா மீதும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் நான் பி.வா.சா.1 ஆக விசாரித்து பகுதியளவில் குறுக்கு விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். புல எண்.149/1 ல் மொத்த இடம் எவ்வளவு என்றால் 85 செண்டு ஆகும். 85 செண்டில் வடகிழக்கு மூலையில் 8 செண்ட் இடத்தை ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் என்பவர் அருணாசல நாயக்கம் என்பவருக்கு 1975 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஏ.ஆர். சுப்பையா முதலியார் என்பவர் ஆதிகாலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் என்றால் சரிதான். அவரது குடும்பமானது பெரியதனவந்த குடும்பம் என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை ஆவண எண்.1961/1959 ன்படி ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கத்திற்கு புல எண். 149/1 ல் 85 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பல சொத்துக்களில் இதுவும் ஒரு சொத்தாகும். ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் ஆவணங்கள் எதுவும் எழுதி வைக்காமல் மனைவி காந்திமதி, மகன்கள் நாராயணன், சுப்பையா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றால் ஆவணங்கள் எழுதி

வைத்தாரா என்று எனக்கு தெரியாது. வாரிசுகளை பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை. அருணாசலநாயக்கருக்கு கொடுக்கப்பட்ட 8 செண்டிற்கு மேல்பக்கம் இந்த வழக்கு 5 செண்டு அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது ஊர்மேலழகியான் ஊராட்சியில் அமைந்துள்ளது என்றால் ஊராட்சியும், பஞ்சாயத்தும் ஊர்மேலழகியான் பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு கதவு எண்.1/88 (1) என்றால் இதுவரை கதவு எண் கொடுக்கப்படவில்லை. அந்த கட்டிடத்திற்கு மின்இணைப்பு எண்.084–004–1822 என்றால் அவ்வாறு மின் இணைப்பு எதுவும் இல்லை. இந்த மின் இணைப்பு வாதி கோவில் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கதவு எண்.1/88 (1) என்பது வாதி திருக்கோவில் பெயரில் வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்தை தவிர ஊர்மேலழகியான் ஊரில் ராஜாத்தி கிளிக்கூட்டு கருப்பன் என்ற பெயரில் வேறு எந்த கோவிலும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 85 செண்டிற்கு வடபக்கம் என்ன உள்ளது என்றால் கிழமேல் பள்ளிகூடத்தெரு உள்ளது. 85 செண்டிற்கு மேற்குபக்கம் என்ன உள்ளது என்றால் கரடிமாட சுவாமி கோவிலுக்கு சென்றுவரக்கூடிய பாதை உள்ளது. 85 செண்டிற்கு தெற்குபுறத்தில் ஊர்மேலழகியான் அரசு மேல்நிலைப்பள்ளி சுற்றுசுவர் உள்ளது. 85 செண்டிற்கு கீழ்புறம் யாருக்கு பாத்தியம் என்றால் உரிமையாளர் பெயர் தெரியவில்லை. புல எண். 149/2 ஏ,2 பி, 3 ஆகிய சொத்துக்கள் உள்ளது. புல எண். 149/2 ஏ,2 பி, 3 ஆகிய சொத்துக்களில் எவ்வளவு பரப்பு சொத்து உள்ளது என்றால் காம்பவுண்ட் சுவர் உள்ளதால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் வீடும், தென்னந்தோப்பும் உள்ளது. நான் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பார்வையிட்டு தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 39 ஆனது 2003–2004 ம் ஆண்டிலேயே கதவு எண்.1/88(1) என்ற சொத்திற்கு வாதி கோவில் பெயரில் வரி விதிப்பு ஏற்பட்டுள்ளதாக

சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறாகும். அசல் வழக்கு எண். 541/2009 ல் வாதிகள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட ஐ.ஏ.1/2020 மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சம்மத குறிப்பானை கொடுக்கப்பட்ட பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கு எதிராக மதுரை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு எண.1376/2021 என்ற மனுவை முருகேசன் என்பவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அந்த சீராய்வு மனு உத்தரவில் எனக்கு 60 செண்ட் மட்டுமே பாத்தியம் என சொல்லப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் உச்சநீதிமன்றத்தில் சிவில் அப்பில் நம்பர் 1584/2023 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் சீராய்வு மனுவை விசாரிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் மறுதிறப்பு உத்தரவை ரத்து செய்து மீண்டும் சீராய்வு மனுவை விசாரணை செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டது. அந்த சீராய்வு மனுவில் மனுவை தள்ளுபடி செய்து 60 செண்டை பொறுத்து பிரிவு 152 சிபிசியின் படி தனியாக மனு தாக்கல் செய்து உத்தரவை பெற்றுக் கொள்ளலாம் என சொல்லப்பட்டிருந்தது என்றால் முதலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் அந்த மனுவின் மனுதாரர் தரப்பில் மீண்டும் கூறியதால் தனியாக மனு தாக்கல் செய்து நிவாரணம் தேடி கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் காந்திமதி, நாராயணன் , சுப்பையா ஆகியோர்கள் இடைமனு எண். 10/23 என தென்காசி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால சரிதான். அந்த மனுவில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்றால் சரிதான். அந்த மனுவில் 60 செண்ட் மட்டுமே எனக்கு பாத்தியம் என உத்தரவு 9.6.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் முழு விபரம் நகலை பார்த்தால் தான் தெரியவரும். அந்த உத்தரவிற்கு எதிராக

சீராய்வு மனு எண்.1857/25 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு 18.7.25 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தகவல் வரவில்லை. என்னிடம் காட்டப்பட்ட ஆவணத்தில் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதாக பதிவுகள் உள்ளது என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியும் என்றும், நீதிமன்றத்தில் முறையாக தெரிவிக்ககூடாது என்பதற்காக படிக்க தெரியாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் உத்தரவானது இடைமனு எண். 10/23 ல் வழங்கப்பட்ட உத்தரவு கணிணி நகல் என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும். இடைமனு எண். 10/23 உத்தரவை அனுசரித்து அசல் வழக்கு எண். 541/2009 ல் எனக்கு 60 செண்ட் மட்டுமே பாத்தியம் என திருத்தப்பட்டுள்ளது என்றால் திருத்தப்பட்டதாக உள்ளது. அசல் வழக்கு எண்.541/2009 ன் திருத்தப்பட்ட தீர்ப்பாணை வா.சா.ஆ 47 ஆகும். சீராய்வு மனு எண்.1857/25 க்கு எதிராக நான் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் நகல் இதுநாள் வரை கிடைக்கவில்லை. அந்த உத்தரவிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்து வருகிறேன். உயர்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டால் மேல்முறையீடு செல்லமுடியும் என்றால் சரிதான். சீராய்வு மனு எண்.1857/25 எனக்கு விரோதமாக எனக்கு விரோதமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீடு தாக்கல் செய்ய உள்ளேன் என்றால் சரிதான். அதனால் எனக்கு சீராய்வு மனு எண.1857/25 தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் தெரியும் என்றால் தெரியும். எனக்கு 60 செண்டுக்கு மேல் எந்த உரிமையும் இல்லை இதுநாள் வரை நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.541/2009 ன்படி எனக்கு 60 செண்ட் மட்டுமே பாத்தியம் என தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.88/2020 என்ற வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை , வரைபடம் தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அறிக்கை அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த அறிக்கை மற்றும் வரைபடம் வா.சா.ஆ 48, வா.சா.ஆ 49 ஆகும். நான் அந்த ஆணையர் அறிக்கையின் எதிராக ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்பட்ட எதிர்வழக்குரையானது அசல் வழக்கு எண்.88/2020 ல் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ 50 ஆகும். இரண்டு வழக்குகளிலும் என்னுடைய எதிர்வழக்குரையை சந்திரா ஏற்புரை செய்துள்ளார் என்றால் சரிதான். சீராய்வு மனு எண.1857/25 கடந்த 18.7.25 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு 2 ம்பிரதிவாதி சந்திரா மூலம் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.221/25 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.221/25 ல் இந்த வாதிகள் தரப்பில் வழக்குரையை நிராகரிக்க கோரி இடைமனு எண். 5/25 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சந்திராவிற்கு நான் எப்போது கிரையம் கொடுத்தேன் என்றால் 16.4.2019 ல் கொடுத்தேன். அந்த ஆவணத்தின் எண் 1528/19 இடைகால் சார்பதிவாளர் அலுவலகம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் மோசடியானது என மாவட்ட பதிவாளர் அலுவலகம் கடந்த 5.7.2022 தேதியில் ந.க.எண்.2344/ஆ 2/2022 உத்தரவின்படி ரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு எதிராக நீதிபேரானை மனு தாக்கல் செய்து மாவட்ட பதிவாளர் உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது. நீதிபேரானை மனுவில் நான் தரப்பினரா என்றால் ஞாபகமில்லை. நீதிபேராணை எண் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் சந்திராவிற்காக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் மனு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. இதுநாள்வரை

மதுரை உயர்நீதிமன்றத்தில் எத்தனை மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் ஒரே வழக்கறிஞர் மூலம் ஆஜரானேனா அல்லது பல வழக்கறிஞர் மூலம் ஆஜரானேனா என்றால் ஞாபகமில்லை. அசல் வழக்கு எண். 88/2020 ல் ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் உத்தேச வரைபடம் அசல் வழக்கு எண்.88/2020 ல் பெறப்பட்டது என்றால் அதில் அசல் வழக்கு எண் சொல்லப்படவில்லை. அந்த வழக்கிற்காக கொடுக்கப்பட்டுள்ளது. அந்த உத்தேச வரைபடம் சான்றிட்ட வரைபடம் வா.சா.ஆ 51 ஆகும். என்னிடம் காட்டப்பட்ட ரசீதுகள் கதவு எண். 1/88(1)க்காக வாதி பெயரில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். அது மோசடியாக வழக்கிற்காக தயார் செய்யப்பட்டிருக்கலாம். அசல் வழக்கு எண். 541/2009 என்ற வழக்கின் தீர்ப்புரையின் அடிப்படையில் எனக்கு 77 செண்டு கொடுக்கப்பட்டதாக கூறி கடந்த 2019 ம் ஆண்டு வாதிகளின் அனுபவத்தில் வழக்கு சொத்தை பொறுத்து நான் இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் என் மீது இரண்டு குற்ற புகார்கள் கொடுக்கப்பட்டது என்றால் பல புகார்கள் கொடுக்கப்பட்டது. ரசீது வாங்குவதற்காக அந்த புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ராஜாகிளி கூட்டுகருப்பன் கோமரத்தார்கள் என்று வாதி தரப்பினர்கள் அழைக்கப்படுவார்கள் என்றால் அது எனக்கு தெரியாது . அதில் 275 தலைகட்டு உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அதை நான் விசாரித்து பார்த்தேனா என்றால் இல்லை. அவர்களுக்கு கோவில் திருவேங்கடத்தில் கீழகரிசல்குளம் ஊரில் உள்ளது என்றால் சரிதான். விசாரித்து தெரிந்து கொண்டேன். அந்த கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்து 60 ஆண்டுகளுக்கு முன்னதாக வழக்கு சொத்தில் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள கோவிலில் செவ்வாய், வெள்ளி மற்றும் சிவராத்திரி 8 ம் பூஜை அன்று திருவிழா நடத்துவார்கள் என்றால் அவ்வாறான கோவில் அங்கு எதுவும் இல்லை. வழக்கு தபசில் சொத்தில் வடபக்கம் கிழமேல் பள்ளிகூட தெருவை ஒட்டி நான்

கிழமேலாக ஹலோபிளாக்வைத்து அடைப்பு சுவர் கட்டி வாதிகளை பிராது தபசில் கோவிலை வழிபட முடியாமல் இடைஞ்சல் செய்தேன் என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் உள்ள இடத்தில் நான் கட்டிடம் கட்டி அனுபவம் செய்து வருகிறேன். ஊர்மேலழகியான் ஊராட்சியில் அனைத்து தெருவில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் 2019ம் ஆண்டில் வைத்துள்ளார்கள். அனைத்து தெருவிலும் வைக்கவில்லை. வாதிகள் உள்ள தெருவில் வைத்துள்ளார்கள். நான் அந்த வாதிகளின் சொத்தில் அடைப்பு சுவர் கட்டி இடையூறு செய்தது சிசிடிவி பதிவில் பதிவாகி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் இடைஞ்சல் செய்யவில்லை. நான் முன்னெச்சரிக்கை மனு வாதிகள் பெயரில் தாக்கல் செய்தேனா என்றால் ஞாபகமில்லை. பிராது படி வாதிகள் கோரியபரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.